செ.வெ.எண். 917 நாள் 03.12.09

# பத்திரிக்கை செய்தி

விவசாய தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் நலனிற்காக தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் –2006 தொடங்கப்பட்டு இத்திட்டம் சிறப்பாக செயல்பட தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் நலவாரியம் அமைக்கப்பட்டு அதன் தலைவராக நியமிக்கப்பட்ட வாரியத் தலைவர் டாக்டர் கே.பி. இராமலிங்கம், அவர்களின் தலைமையில் வாரியத்தின் இணைத் தலைவர், ஆணையர் முதன்மை செயலர் மற்றும் (விதொநவா) மற்றும் வருவாய் நிர்வாகத்துறை, மற்றும் உறுப்பினர் செயலர் இயக்குநர் நில சீர்திருத்தத்துறை முன்னிலையில் 4.12.09 அன்று காலை 11 மணியளவில் அனைத்து தனித்துணை ஆட்சியர்கள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) கலந்து கொள்ளும் இரண்டாவது ஆய்வு கூட்டம் சென்னை, சேப்பாக்கம் இணைப்பு அலுவலகத்தின், 5–வது தளத்தில் நடைபெற உள்ளது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாவட்டங்களில் திட்டம் செயல்பாடு குறித்த ஆய்வும் மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கபட உள்ளதாக வாரியத்தின் தலைவர் டாக்டர் கே.பி. இராமலிங்கம் தெரிவித்தார்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.